සමාජ සවිබලගැන්වීම් හා සුභසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
Department of Divineguma Development

4වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
4வதுமாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
4thfloor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனதுஇல / My No: DD/HO/06/M/02/09

ඔබේ අංකය / உமது இல / Your No: ........................................

දිනය / திகதி / Date: 2016.11.08

சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்

மற்றும் சகல மாவட்ட பணிப்பாளர்கள் ஆகியோருக்கு,

## சமுர்த்தி தேசிய வர்த்தக கண்காட்சி

**பத்தரமுல்லை தியந்த பூங்கா வளவு – 2016-12-06,07,08**

20 வருடங்களுக்கு மேற்பட்ட காலங்களாக நிவாரணங்களை வழங்கி, உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி வங்கி முறைக்குப் பழக்கப்படுத்தி, குறுநிதியியல் கடன்களை வழங்கி நாடுபூராகவும் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட தொழில் முயற்சியாளர்களை சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக உருவாக்கியுள்ளது. இருப்பினும் அதில் அதிகமானோர் சிறியளவிலான வர்த்தகர்களாக இருப்பது விசேடமானதொன்றாகும். சந்தையில் உள்ள அதிக போட்டித்தன்மை காரணமாக நிலையான சந்தைப் பகுதியொன்றினை உரித்தாக்கிக் கொள்ளல் மற்றும் வர்த்தக தொகுதியினை விரிவாக்கிக் கொள்ளல் என்பன அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாக கருதமுடியும். சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ள அவர்களை மேலும் பலப்படுத்த வேண்டியுள்ளமை இதன் காரணத்திலேயாகும். இதன் பொருட்டு மாவட்ட மட்டத்தில் தெட்டத் தெளிவாக காணக்கூடிய மற்றும் வெற்றிகரமான சமுர்த்தி வர்த்தகர்களை ஒன்று திரட்டி தேசிய மட்டத்தில் வர்த்தகக் கண்காட்சி ஒன்றினை நடாத்துவதன் ஊடாக அவர்களை ஊக்குவிக்க முடியும். அத்துடன் தொடர்ந்தும் சமுர்த்தி வேலைத்திட்டத்துடன் தொடர்புள்ள ஏனைய வர்த்தகர்களுக்கும் இது ஒரு ஊக்க மருந்தாக அமையும்.

அந்த நோக்கங்களை முன்வைத்து வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சமுர்த்தி தேசிய வர்த்தக கண்காட்சியினை 2016ம் ஆண்டில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2016 டிசம்பர் மாதம் 06,07, மற்றும் 08 ஆகிய தினங்களில் பத்தரமுல்லை தியத்த பூங்கா வளவில் இத் தேசிய வர்தகக் கண்காட்சியினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கண்காட்சியின் பொருட்டு கலந்து கொள்ளும் தொழில் முயற்சியாளர்களிலிருந்து சிறந்த தொழில் முயற்சியாளர்கள் 10 பேரைத் தெரிவு செய்து பாராட்டுதலுக்குட்படுத்தி பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

01. ஒரு மாவட்டத்திற்கு குறித்த உற்பத்தி கண்காட்சியின் பொருட்டு 20’ × 10’ அளவிலான 03 கூடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். ( தேவைக்கேற்ப 10’ × 10’ அளவிலன 06 கூடங்களாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதற்கமைய மிகப் பொருத்தமான தொழில் முயற்சியாளர்கள் பலரைத் தெரிவு செய்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் தொழில் முயற்சியாளர்கள் 03 நாட்களும் தங்கியிருத்தல் வேண்டும். விற்பனைக் கூடம் ஒன்றின் புகைப்படம் ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

02. சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள் சார்ந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற விசேட உற்பத்திகளுக்கான வாய்ப்பினை வழங்கி இந்த உற்பத்திகள் உள்ள மாதிரிக் கிராமத்திற்கு 20’ × 10 அளவிலான ஒரு விற்பனைக் கூடம் மேலதிகமாக ஒதுக்கப்படும்.

D/KUGAN an

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel:011-2873802/2872202
Fax -011-2889002
dg@divineguma.gov.lk

අතිරේක අධ්‍යක්ෂජනරාල් / மேலதிகபணிப்பாளர்தலைமையதிபதி / Additional DirectorGeneral
011-2871672
011-2887280
adg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (පාලන) / பணிப்பாளர்(நிர்வாகம்) / Director (Administration)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
011-2887722**(Hotline)**

03. தொழில் முயற்சியாளர்கள் அவர்களது உற்பத்திகளை எடுத்துவருவதற்கான போக்குவரத்துக்குப் பொருத்ததமான வேலைத்திட்டம் ஒன்றினை பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதன் பொருட்டு அவர்களை ஊக்குவிப்புச் செய்யும் நடவடிக்கை ஒன்றாக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் அந்தந்த மாவட்டகளுக்கேற்ப வழங்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டளவு இணைப்பு இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான நிதி ஒதுக்கீட்டினைக் கோரும்நடவடிக்கைகளை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2016.12.06ம் திகதி மு.ப. 10.00 மணியளவில் சகல கண்காட்சிக் கூடங்களையும் அழகாக அலங்கரித்து பொருட்களை காட்சிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். 03 நாட்களுக்குமான பொருட்களின் கண்காட்சி நேரமானது மு. ப. 10.00 மணியிலிருந்து பி.ப. 11.00 மணிவரையாகும்.

04. தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான உணவுகளை அவரவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் தேவையான தங்குமிட வசதிகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.

05. கலந்து கொள்ளும் தொழில் முயற்சியாளர்களால் 03 நாட்களுக்கும் போதுமானளவு பிரகாரம் தங்களது உற்பத்தியினை எடுத்துவரல் வேண்டும். அத்துடன் விற்பனைக் கூடத்தில் உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கான பொருட்கள் இல்லை என்பதுடன் அந்த உற்பத்திகளை பொதியிடுவதற்கும் கண்காட்சிப் படுத்துவதற்குத் தேவையான பொருட்களையும் எடுத்துவரல் வேண்டும். ( அமர்ந்து கொள்வதற்குத் தேவையான ஒரு இருக்கை கூடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. )

06. கண்காட்சி நடைபெறும் திடலில் உணவு தயாரிப்பு மற்றும் நுகர்வுகளின் பொருட்டும் அடைக்கப்படாத உணவுகளை விற்பனை செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என “தியத்த” திடலுக்கு பொறுப்பான நிறுவனத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

07. மாவட்ட மட்டத்தில் சமுர்த்தி தேசிய வர்த்தக கண்காட்சியின் பொருட்டு கலந்து கொள்ளச் செய்யும் தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான தகவல்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் ஊடாக 2016.11.18ம் திகதிக்கு முன்னர் சந்தைப்படுத்தல் பணிப்பாளருக்கு கிடைக்க ஆவண செய்தல் வேண்டும்.

08. உற்பத்திகளின் பெயர்ப் பலகையினை காட்சிப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் இவ்விடத்திலில்லை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் முறையிலான பெயர்ப்பலகை யொன்றினை தயாரித்துக் கொள்ள வேண்டியதுடன் பிற எந்தவிதமான ஒரு பெயர்ப்பலகையினையும் எடுத்துவரலாகாது எனவும் ஆலோசணைகளை வழங்கவும். (இணைப்பு இலக்கம் 02 மற்றும் 03)

09. கண்காட்சியின் முன் நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரைப் பெயரிட்டு தொலைபேசி இலக்கத்துடன் எனக்கு அறிவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

சந்தைப்படுத்தல் பிரிவின் தொலைபேசி இலக்கம் **0112862659**

**நீல் ஹப்புஹின்ன**
**பணிப்பாளர் தலைமையதிபதி**

Translated By : M.M.M JAWHAR (TRANSLATOR)